**விசேட செலவின அலகுகள் (ஒதுக்கீட்டுத் தலைப்பு 1 முதல் 8, 11 முதல் 22 மற்றும் 229 முதல் 230 வரை) மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - விசேட செலவின அலகுகள் மற்றும் ஒதுக்கீட்டுச் செலவுத் தலைப்புகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு விசேட செலவின அலகுகள் மற்றும் ஒதுக்கீட்டுச் செலவுத் தலைப்புகளிற்கான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

---

**விசேட செலவின அலகுகள் மற்றும் ஒதுக்கீட்டுச் செலவுத் தலைப்புகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

**1. விசேட செலவின அலகுகளிற்குரிய ஒதுக்கீட்டுச் செலவுத் தலைப்புகள், தொடர்புடைய திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள்**

| செலவுத் தலைப்பு | திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் பெயர்கள் |
|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி |
| 2 | பிரதமர் அலுவலகம் |
| 3 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் |
| 4 | அமைச்சரவை அலுவலகம் |
| 5 | பாராளுமன்றம் |
| 6 | பாராளுமன்ற சபைத்தலைவரின் அலுவலகம் |
| 7 | பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகம் |
| 8 | பாாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் |
| 11 | அரசியலமைப்பு மன்றம் |
| 12 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு |
| 13 | நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு |
| 14 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| 15 | நிர்வாக முறையீடுகள் தீர்வுசெய்தல் அதிகாரசபை |
| 16 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் புலனாய்வு ஆணைக்குழு |

| | |
|---|---|
| 17 | தேர்தல்கள் திணைக்களம் |
| 18 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| 19 | நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் |
| 20 | நிதி ஆணைக்குழு அலுவலகம் |
| 21 | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 22 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் |
| 230 | சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களம் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 18,493 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 17,101 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 0.18 மில்லியன் இற்கும் ரூபா 726.72 மில்லியனிற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 1.48 சதவீத்திற்கும் 41.69 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களம் / அலுவலகம் / ஆணைக்குழு | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|

| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா ஆயிரம் | ரூபா ஆயிரம் | ரூபா ஆயிரம் | ரூபா ஆயிரம் | ரூபா ஆயிரம் | ரூபா ஆயிரம் |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 2,871,227 | 7,260,990 | 2,860,424 | 6,545,066 | 10,803 | 715,924 |
| 2 | பிரதமர் அலுவலகம் | 171,680 | 60,650 | 169,442 | 52,253 | 2,238 | 8,397 |
| 3 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் | 85,220 | - | 69,920 | - | 15,300 | - |
| 4 | அமைச்சரவை அலுவலகம் | 38,774 | 11,324 | 37,085 | 8,707 | 1,689 | 2,617 |
| 5 | பாராளுமன்றம் | 1,418,537 | 150,000 | 1,287,985 | 128,570 | 130,552 | 21,430 |
| 6 | பாராளுமன்ற சபைத்தலைவரின் அலுவலகம் | 20,200 | 1,650 | 19,299 | 1,178 | 901 | 472 |
| 7 | பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகம் | 24,975 | 4,800 | 22,688 | 4,065 | 2,287 | 735 |
| 8 | பாாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 54,585 | 10,100 | 50,987 | 9,138 | 3,598 | 962 |
| 11 | அரசியலமைப்பு மன்றம் | 19,582 | 200 | 11,522 | 12 | 8,060 | 188 |
| 12 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 113,116 | 6,944 | 90,255 | 1,544 | 22,861 | 5,400 |
| 13 | நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு | 34,470 | 500 | 27,955 | 353 | 6,515 | 147 |
| 14 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 45,742 | 550 | 30,726 | 126 | 15,016 | 424 |
| 15 | நிர்வாக முறையீடுகள் தீர்வுசெய்தல் | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அதிகாரசபை | 11,935 | 225 | 11,884 | 96 | 51 | 129 |
| 16 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் புலனாய்வு ஆணைக்குழு | 116,450 | 85,860 | 104,505 | 35,965 | 11,945 | 49,895 |
| 17 | தேர்தல்கள் திணைக்களம் | 4,166,027 | 52,500 | 3,995,023 | 44,350 | 171,004 | 8,150 |
| 18 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 583,692 | 311,150 | 557,210 | 234,773 | 26,482 | 76,377 |
| 19 | நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் | 5,908 | 4,575 | 5,461 | 4,523 | 447 | 52 |
| 20 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 33,950 | 57,490 | 32,322 | 46,015 | 1,628 | 11,475 |
| 21 | தேசிய கல்வி ஆணைக்குழு | 25,880 | 5,150 | 22,424 | 4,557 | 3,456 | 593 |
| 22 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 104,740 | 13,865 | 98,900 | 10,410 | 5,840 | 3,455 |
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் | 391,220 | 35,610 | 361,472 | 32,689 | 29,748 | 2,921 |
| 230 | சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களம் | 47,150 | 33,500 | 45,061 | 24,529 | 2,089 | 8,971 |
| | | -------------- | ------------- | -------------- | ------------- | -------------- | ------------ |
| | மொத்தம் | **10,385,060** | **8,107,633** | **9,912,550** | **7,188,919** | **472,510** | **918,714** |
| | | ======== | ======== | ======== | ======== | ======== | ======= |

## 2.2 வருமானக் கணக்கு

**கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

திணைக்களமொன்றினால் 2010 ஆம் ஆண்டில் ஒரு வருமான தலைப்புக்காக ரூபா 35 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 59.32 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு வருமானத்திலும் ரூபா 24.32 மில்லியன் அல்லது மதிப்பிடப்பட்ட வருமானத்தினைக் காட்டிலும் 69.49 சதவீதம் மிகையாக வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மிகைச் சேகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 20:03:02:01 | 35,000,000 | 59,322,219 | 24,322,219 | 69.49 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

18 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்ததுடன் 02 திணைக்களங்கள் மற்றும் ஆணைக்குழுக்களினால் அந்த எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 | 00101 | 25,000,000 | 15,102,244 | 12,000,000 | 16,226,649 | 90,000,000 | 74,675,524 |
| 2 | 00201 | 7,000,000 | 4,156,430 | 3,300,000 | 3,634,205 | 30,000,000 | 19,994,996 |
| 3 | 00301 | 2,200,000 | 750,000 | 1,450,000 | 1,608,605 | 10,000,000 | 6,059,507 |
| 4 | 00401 | 1,600,000 | 1,147,757 | 1,500,000 | 1,998,521 | 15,000,000 | 10,736,395 |
| 5 | 00501 | 37,500,000 | 36,582,169 | 18,500,000 | 26,340,237 | 165,000,000 | 145,184,743 |
| 6 | 00601 | 1,500,000 | 459,450 | 900,000 | 1,180,107 | 6,000,000 | 2,387,816 |
| 7 | 00701 | 2,000,000 | 1,216,315 | 900,000 | 1,103,400 | 8,000,000 | 4,259,510 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 00801 | 2,000,000 | 920,400 | 1,100,000 | 1,453,309 | 9,000,000 | 3,989,424 |
| 12 | 01201 | 7,441,000 | 5,693,784 | 3,000,000 | 5,089’186 | 31,000,000 | 23,456,916 |
| 13 | 01301 | 4,000,000 | 3,606,708 | 1,800,000 | 1,441,199 | 17,500,000 | 8,526,718 |
| 14 | 01401 | 3,500,000 | 997,222 | 1,000,000 | 1,650,939 | 12,000,000 | 6,497,522 |
| 15 | 01501 | 1,334,000 | 30,000 | 200,000 | 252,600 | 3,500,000 | 645,750 |
| 16 | 01601 | 10,131,000 | 3,600,000 | 3,000,000 | 3,766,589 | 35,000,000 | 19,744,026 |
| 17 | 01701 | 30,000,000 | 13,726,500 | 19,000,000 | 15,240,144 | 80,000,000 | 62,896,470 |
| 18 | 01801 | 73,000,000 | 35,418,258 | 37,000,000 | 45,921,260 | 300,000,000 | 266,058,896 |
| 19 | 01901 | 1,000,000 | 292,410 | 220,000 | 306,055 | 4,000,000 | 1,410,157 |
| 20 | 02001 | 5,000,000 | 2,145,809 | 1,500,000 | 1,933,141 | 15,000,000 | 9,762,298 |
| 21 | 02101 | 2,000,000 | 1,036,127 | 780,000 | 1,072,919 | 7,000,000 | 3,108,898 |
| 229 | 22901 | 24,000,000 | 13,011,681 | 9,600,000 | 14,015,650 | 79,000,000 | 53,613,622 |
| 230 | 23001 | 6,000,000 | 2,830,277 | 2,000,000 | 3,183,700 | 23,000,000 | 13,687,606 |

### 2.3.2 வர்த்தகமற்ற முற்பணக் கணக்குகள்

ஆணைக்குழு ஒன்றின் வர்த்தகமற்ற முற்பணக் கணக்குச் செயற்பாடுகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 16 | 01602 | 7,000,000 | 2,404,500 | 1,500,000 | 2,232,000 | 7,500,000 | 6,811,212 |

### 2.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

22 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிற்காக இல் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 137,347,600 வரவு மிதியொன்றும் ரூபா 101,033 செலவு மீதியொன்றும் காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவுத் தலைப்பு | திணைக்களங்களம்/ அலுவலகம் / ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வரவு/(செலவு) |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 7002/0117/000/0010 | 211,481 |
| 2 | பிரதமர் அலுவலகம் | 7002/0118/000/0010 | 8,858,077 |
| 3 | மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் | 7002/0390/000/0010 | 4,014,467 |

| | | | |
|---|---|---|---|
| 4 | அமைச்சரவை அலுவலகம் | 7002/0119/000/0010 | 4,092 |
| 5 | பாராளுமன்றம் | 7002/0120/000/0010 | 59,616 |
| 6 | பாராளுமன்ற சபைத்தலைவரின் அலுவலகம் | 7002/0275/000/0010 | 61,078 |
| 7 | பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகம் | 7002/0276/000/0010 | 24,774 |
| 8 | பாாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | 7002/0277/000/0010 | 550 |
| 11 | அரசியலமைப்பு மன்றம் | 7002/0363/000/0010 | 128,332 |
| 12 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 7002/0297/000/0010 | 2,862,369 |
| 13 | நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு | 7002/0122/000/0010 | 2,867,481 |
| 14 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 7002/0365/000/0010 | 8,590 |
| 15 | நிர்வாக முறையீடுகள் தீர்வுசெய்தல் அதிகாரசபை | 7002/0366/000/0010 | 1,650 |
| 16 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் புலனாய்வு ஆணைக்குழு | 7002/0139/000/0010 | 77,621 |
| 17 | தேர்தல்கள் திணைக்களம் | 7002/121/000/0010 | 29,376,338 |
| 18 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 7002/0001/000/0010 | 8,243,603 |
| | | 7003/0089/000/0010 | 16,522,312 |
| | | 7003/0100/000/0006 | (101,033) |
| | | 7003/0372/000/0003 | 20,000,000 |
| 19 | நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் | 7002/0278/000/0010 | 90,528 |
| 20 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 7002/0279/000/0010 | 8,484,582 |
| 21 | தேசிய கல்வி ஆணைக்குழு | 7002/0256/000/0010 | 762,662 |
| 22 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 7002/0408/000/0010 | 4,287,073 |

| | | | |
|---|---|---|---|
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் | 7002/0137/000/0010 | 24,624,488 |
| 230 | சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களம் | 7002/0138/000/0010 | 5,775,836 |

**(ஆ) பொதுவைப்புக் கணக்கு**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 15 திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 1,582,565,480 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவுத் தலைப்பு | திணைக்களம்/ அலுவலகம் / ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வரவு/(செலவு) |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 6000/0003/000/0567 | 372,837,118 |
| | | 6000/0003/000/0635 | 571,887,664 |
| | | 6000/0003/000/0077 | 7,297,640 |
| | | 6000/0011/000/0356 | 43,596,174 |
| | | 6000/0011/000/0408 | 146,946,294 |
| | | 6000/0011/000/0481 | 162,000,000 |
| | | 6000/0015/000/0001 | 150,397,155 |
| 2 | பிரதமர் அலுவலகம் | 6000/0011/000/0482 | 21,971,919 |
| | | 6000/0015/000/0002 | 10,000 |
| 4 | அமைச்சரவை அலுவலகம் | 6000/0015/000/0003 | 170,572 |
| 5 | பாராளுமன்றம் | 6000/0003/000/0095 | 373,950 |
| | | 6000/0003/000/0633 | 12,000 |
| | | 6000/0011/000/0359 | 15,612,112 |
| | | 6000/0011/000/0483 | 450,000 |
| | | 6000/0015/000/0004 | 10,486,464 |

| | | | |
|---|---|---|---|
| 12 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 6000/0015/000/0008 | 50,000 |
| 13 | நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு | 6000/0002/000/0032 | 52,008 |
| 14 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 6000/0003/000/0649 | 11,181 |
| 16 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் புலனாய்வு ஆணைக்குழு | 6000/0011/000/0484 | 22,050,000 |
| | | 6000/0015/000/0010 | 148,727 |
| 17 | தேர்தல்கள் திணைக்களம் | 6000/0003/000/0090 | 1,085,316 |
| | | 6000/0015/000/0011 | 3,116,622 |
| 18 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 6000/0003/000/0174 | 549,858 |
| | | 6000/0015/000/0012 | 4,864,881 |
| 20 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 6000/0003/000/0591 | 41,638 |
| | | 6000/0011/000/0358 | 5,124,483 |
| | | 6000/0015/000/0013 | 50,000 |
| 21 | தேசிய கல்வி ஆணைக்குழு | 6000/0003/000/0583 | 15,000 |
| 22 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 6000/0011/000/0485 | 4,000,000 |
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் | 6000/0003/000/0093 | 13,733,874 |
| | | 6000/0011/000/0522 | 7,918,980 |
| | | 6000/0015/000/0110 | 449,342 |
| 230 | சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களம் | 6000/0011/000/0523 | 15,240,000 |
| | | 6000/0015/000/0111 | 14,508 |
| | | | ----------------- |
| | மொத்தம் | | 1,582,565,480 |
| | | | ========== |

## பகுதி II

## ஒவ்வொரு விசேட செலவின அலகுகள் மற்றும் ஒதுக்கீட்டுச் செலவுத் தலைப்புகளிற்கான விபரமான அறிக்கை

---

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி

சனாதிபதி செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 03 ஆந் திகதி சனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகளைப் பேணல்

(i) அலுவலகத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அவை அத்திகதியின் பின்னர் சமர்ப்பிக்கட்டிருந்தன.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 1 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2011 மே 10 |
| 00101 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்களை செலுத்தல் மீதான இணக்கக் கூற்று | 2011 மே 10 |

(ii) அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| i. நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| ii. கணனித் துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### (ஆ) பாதீட்டு முரண்

------------------------

(i) தலைப்பு 1 இன் கீழ் 05 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,028,366 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 21.9% இற்கும் 84.38% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

குறித்த நோக்க உப கட்டுநிதிகளை வழங்குதலும் தீர்த்தலும்

அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த குறித்த நோக்க உப கட்டுநிதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 398,000 மொத்தமான உப கட்டுநிதிகள் வழங்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றாது அத்தொகை 10 முதல் 11 மாதங்கள் வரை கைவசம் வைத்திருந்து பின்னர் காசாக தீர்க்கப்பட்டிருந்தது.

ii. நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 06 உத்தியோகத்தர்களிற்கு 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 403,000 மொத்தமான குறித்தநோக்க உப கட்டுநிதிகள் 10 முதல் 11 ½ மாதங்கள் வரையான கால வீச்சில் தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன.

iii. 07 உத்தியோகத்தர்களிற்கு 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 570,000 மொத்தமான குறித்தநோக்க உப கட்டுநிதிகளில் ரூபா 143,513 ஆன 25.2 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 426,487 ஆன 74.8 சதவீதம் மீளவும் காசாக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எதிர்பார்த்த செலவினம் செய்யப்படாமையால் வழங்கப்பட்டிருந்த முற்பணத்தினை செலவிடாது குறித்த உத்தியோகத்தர்களினால் எஞ்சிய தொகைகள் காசாக வைப்புச் செய்யப்பட்டிருந்ததாக சனாதிபதியின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

iv. நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் குறித்த நோக்க உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக் கூடிய உச்ச தொகை ரூபா 20,000 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லையினை மீறி 07 சந்தர்ப்பங்களில் 06 உத்தியோகத்தர்களிற்கு மொத்தம் ரூபா 865,000 குறித்தநோக்க கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. இதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வருகின்ற ரூபா 416,433,292 மொத்தத் தொகையான வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 1996 ஜனவரி 08 ஆந் திகதிய மற்றும் 2008 நவம்பர் 30 ஆந் திகதிய சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 14 மற்றும் 02 ஆண்டுகள் பழமைவாய்ந்த மீதிகளின் மொத்தம் ரூபா 83,789 ஆக காணப்பட்டது. அந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முடியாது போயிருந்தது. இது தொடர்பில் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் அண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,062,765 மொத்தக் கடன் மீதி 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த கடன் மீதிகளிற்குரிய காலப்பகுப்பாய்வு 01 தொடக்கம் 04 ஆண்டுகளிற்கு இடைப்பட்டதாக இருந்தது.

(iii) 2002 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் 05 உத்தியோகத்தர்களின் சேவை வறிதாக்கப்பட்டமையால் ரூபா 292,443 மொத்தக் கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவணை அடிப்படையில் அறவிடப்பட்டு வருவதுடன் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 281,465

மொத்தமான கடன்மீதியினை அறவிடுவதற்கு 2011 யூலை 25 ஆந் திகதி வரை முடியாது போயிருந்தது.

(iv) 2008 ஒக்தோபர் 27 ஆந் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 355,530 கடன்மீதியினை அறவிடுவதற்கு 2011 யூலை 25 ஆந் திகதி வரை முடியாது போயிருந்தது.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2010 ஆம் அண்டிற்கான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு 2011 நவம்பர் 15 ஆந் திகதியளவில் முடிவுற்றிருந்த போதிலும் அந்த அறிக்கை 2012 செப்தம்பர் 12 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

நி.பி. 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 27 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 189,473,142 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 3,087,040 இனால் மிகைத்து ரூபா 192,560,182 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 1.6 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழே தரப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

அலுவலகத்திற்குச் சொந்தமான 64 வாகனங்களிற்கு 80 சந்தர்ப்பங்களில் விபத்துக்கள் ஏற்பட்டமையால் ரூபா 47,189,915 மொத்தமான இழப்புக்கள் ஏற்பட்டிருந்தது. அந்த இழப்புக்கள் தொடர்பில் நி.பி. 102, 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் 2011 திசெம்பர் 31 வரைக்கும் அந்தப் பணிகளை முடிப்பதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

**1.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 218 | 218 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 105 | 105 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 310 | 310 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 416 | 416 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | | 71 | 71 |
| | மொத்தம் | 1,049 | 1,120 | 71 |

**1.8 உள்ளகக் கட்டுப்பாடு**

**(அ) உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை செயற்படுத்தல்**

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 02 – பிரதமர் அலுவலகம்**

பிரதமர் அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய

அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 30 ஆந் திகதி பிரதமரின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பிரமர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்

பிரதமர் அலுவலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 02 இன் கீழ் செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,500,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 10 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 7% இற்கும் 88% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 2.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

நி.பி. 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 08 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 42,144 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 1,261,906 இனால் மிகைத்து ரூபா 1,304,050 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 17 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 76 | 56 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 100 | 78 | 22 |
| | மொத்தம் | 200 | 155 | 45 |

### 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 3 – மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூலை 20 ஆந் திகதி உயர்நீதிமன்ற பதிவாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக

ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**3.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் நிறுவகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 மற்றும் 3.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

12 செலவு விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 9,768,213 ஆக இருந்தது. அது அந்த செலவின விடயத்திற்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 20% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிறுவகத்தினால் 2010 ஆம் அண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 2,243,171 ஆக காணப்பட்டது.

**(ஈ) நட்டங்களும் சேதங்களும்**

03 வாகனங்களிற்கான விபத்துக்கள் தொடர்பில் நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

நி.பி. 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 08 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 15,914 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 27,354 இனால் மிகைத்து ரூபா 43,268 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உயர்நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் 23 நீதிபதிகள் அங்கீகரித்த பதவியணியில் உள்ளடங்கியிருந்ததுடன் அத்திகதியில் ஒரு வெற்றிடம் காணப்பட்டது.

## 4. ஒதுக்கீட்டுத் தலைப்பு 4 – அமைச்சரவை அலுவலகம்

அமைச்சரவை அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 19 ஆந் திகதி அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 4.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| i. நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| ii. கனணித் துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| iii. இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### (ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 ஆம் அண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

05 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 17% இற்கும் 82% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 4.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

நி.பி. 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 10 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 260,442 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 458,533 இனால் மிகைத்து ரூபா 718,975 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 08 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 08 | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை | 26 | 23 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 26 | 23 | 03 |
| | | ----------- | -------- | ---------- |
| | மொத்தம் | 74 | 62 | 12 |
| | | ==== | ===== | ===== |

## 5. ஒதுக்கீட்டுத் தலைப்பு 05 – பாராளுமன்றம்

பாராளுமன்றத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 19 ஆந் திகதி பாராளுமன்ற பொதுச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**5.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 5.4 இலிருந்து 5.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்**

பாரளுமன்றத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**5.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (i) நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி. 94 | ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 4 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படு த்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 111,264 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 6,926,624 இனால் மிகைத்து ரூபா 7,037,888 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் |

| | |
|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) சுற்றறிக்கை ஏற்பாடுகள் | |
| 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வானது 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு அந்த அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தினால் அந்த வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 79 | 75 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 111 | 99 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 205 | 178 | 27 |
| (iv) | ஆரம்ப நிலை | 473 | 454 | 19 |
| (v) | ஏனையோர் (அமைய/ஒப்பந்தம்) | 73 | 66 | 7 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 941 | 872 | 69 |
| | ==== | ===== | ===== |

## 6. ஒதுக்கீட்டுத் தலைப்பு 6 – பாராளுமன்ற சபைத் தலைவரின் அலுவலகம்

பாராளுமன்ற சபைத் தலைவர் அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 22 ஆந் திகதி பாராளுமன்ற சபைத் தலைவர் அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 6.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற சபைத் தலைவர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக்

கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்பு மற்றும் 6.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

09 செலவு விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது 5.74% இற்கும் 95.40% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 6.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 10 | 09 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 28 | 26 | 02 |

## 7. ஒதுக்கீட்டுத் தலைப்பு 7 – பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகம்

பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு

செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 13 ஆந் திகதி பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 7.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 இலிருந்து 7.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**பதிவேட்டின் வகை** **தொடர்புடைய பிரமாணம்**

| ----------------------------- | ----------------------------------------- |
|---|---|
| i. இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| ii. நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| iii. கணனித் துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

13 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 6.35% இற்கும் 90.93% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 7.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 16 | 12 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 16 | 02 |
| | மொத்தம் | 42 | 36 | 06 |

## 8. ஒதுக்கீட்டுத் தலைப்பு 08 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம்

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 8.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) இலிருந்து (ஆ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 8.4 இலிருந்து 8.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்

அலுவலகத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) பாதீட்டு முரண்

09 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 5.6% இற்கும் 81.0% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### 8.4 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

நி.பி. 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 158,453 ஆக காணப்பட்டது. அந்த சேமிப்பினை ரூபா 513,186 இனால் மிகைத்து ரூபா 671,639 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 8.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 07 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 22 | 18 | 04 |
| (iv) | ஆரம்பத் நிலை | 26 | 23 | 03 |
| | மொத்தம் | 59 | 51 | 08 |

## 9. ஒதுக்கீட்டுத் தலைப்பு 11 – அரசியலமைப்புச் சபை

அரசியலமைப்புச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 08 ஆந் திகதி அரசியலமைப்புச் சபையின் பொதுச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 9.2 கணக்குகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 9.3 கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசியலமைப்புச் சபையின் ஒதுக்கீட்டுக் கணக்கு இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்பு மற்றும் 9.4 மற்றும் 9.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்**

அரசியலமப்பு மன்றத்தின் செயலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை.

## 9.4 செயலாற்றல்

(அ) அரசியலமப்பின் பதினெட்டாவது திருத்தத்தினை மேற்கொள்ளும் வரை உறுப்பினர்களை நியமித்தல்

2010 செப்தம்பர் 09 ஆந் திகதி கௌரவ சபாநாயகரினால் சான்றுப்படுத்தப்பட்ட வர்த்தமானியின் II ஆம் பகுதிக்கு குறைநிரப்பாக பிரசுரிக்கப்பட்டிருந்த அரசியலமப்பின் பதினெட்டாவது திருத்தத்தினை மேற்கொள்ளும் வரை 05 உறுப்பினர்கள் 2010 ஆம் ஆண்டில் உறுப்புரிமையை மேற்கொண்டிருந்தனர்.

(ஆ) அரசியலமைப்புச் சபை செல்லுபடியற்றுப் போதல்

2010 செப்தம்பர் 08 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அரசியலமப்பின் பதினெட்டாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையால் அரசியலமைப்புச் சபை செல்லுபடியற்றதானது.

## 9.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | இரண்டாம் நிலை | 06 | 05 | 01 |
| (iii) | ஆரம்ப நிலை | 04 | 04 | - |
| | மொத்தம் | 12 | 11 | 01 |

## 10. ஒதுக்கீட்டுத் தலைப்பு 12 – அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 26 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 10.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 10.4 இலிருந்து 10.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 12 இன் கீழ் 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,160,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 13 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 43% இற்கும் 96% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 10.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கும் புலமைப்பரிசில்களின் கீழ் பட்டப்பின் படிப்பினை பின்பற்றுவதற்காக கலந்துகொள்கின்ற உத்தியோகத்தருக்குத் தேவையான சகல நிதிகளும் அமைய/கைச்செலவினம் (Establishment Allowances) என்பவற்றிற்காக அவஸ்திரேலிய டொலர் 5,000 செலுத்தப்படும் என்று அந்த அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வெளிநாட்டுக்குச் சென்ற அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிற்கு 1996 ஏப்ரல் 20 ஆந் திகதிய எம்எப்/1/1/96 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 2.2.2 (iii) ஆம் பந்திக்கு முரணாக அமெரிக்க டொலர் 750 இற்குச் சமனான இலங்கை ரூபா 86,250 தொகை 2009 ஆம் ஆண்டில் முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிலமையினை கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னரும் அந்த

தொகையினை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 10.5 போதியளவில் அடைந்து கொள்ளப்படாத பிரதான செயற்பாடுகள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் அடைந்து கொள்ளப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளல்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிற்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணைகள் இயலுமான அளவில் விரைவாக மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அநேகமான விசாரணைகளை முடிப்பதற்கு 1 தொடக்கம் 4 ஆண்டுகள் வரையான காலவீச்சு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்பட்டன. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் அந்த தாமதத்திற்கு தாக்கமளித்திருந்த காரணங்களிற்கிடையே ஆணைக்குழுவினால் கட்டுப்படுத்த முடிந்திருந்த பின்வரும் காரணங்களின் பால் கவம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) முறையான ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு 4 மாதங்கள் தொடக்கம் 2 வருடங்கள் 7 மாதங்கள் வரையான காலவீச்சு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தமை.

(ii) ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்காக 09 மாதங்கள் முதல் 27 மாதங்கள் வரையான அதிகூடிய காலவீச்சு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தமை.

மேற்படி விடயங்கள் குறித்து ஆணைக்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டு ஒழுக்காற்று விசாரணைகளை விரைவு படுத்தாமையால்

(i) பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு மிகவும் முக்கியமான பொறுப்புக்களையும் பணிகளையும் ஒப்படைத்து நாட்டிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியாது போனமை.

(ii) குற்றச்சாட்டுக்களிற்கு ஆளாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து முழுமையான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தமை.

(iii) பதவிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் சிலவேளை ஒழுக்காற்று விசாரணையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுகையில் விசாரணைக்காக மிக நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தமையால் பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்த முழுமையான காலப்பகுதிக்கும் அரசாங்கத்திற்கு எவ்வித சேவையினையும் பெற்றுக் கொள்ளாது மொத்தச் சம்பளத்தினையும் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தமை.

இவ்வாறான பாதக நிலைமை ஏற்படுவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுக்காற்று பிரிவின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்களே காரணம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசகராக செயற்பட்ட உத்தியோகத்தர் அவ்வாறு செயற்பட்டிருந்த காலப்பகுதியிலேயே அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு எதிரான அநேகமான ஒழுக்காற்று நடவடிக்கைகளிற்காக விசாரணை உத்தியோகத்தராகவும் செயற்பட்டிருந்தார். அதன் மூலம் சுதந்திரமானதும் முறைப்படியானதுமான விசாரணைகள் நடாத்தப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டினை மூன்றாம் தரப்பினர்களால் முன்வைக்கக் கூடிய விதத்தில் செயற்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 10.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளைத் தயாரிப்பதற்காக பங்குபற்றிய உறுப்பினர்கள் மற்றும் அதற்கு உதவியாகவிருந்த அலுவலக பதவியினருக்கு 2 ஆண்டு காலத்தில் ரூபா 498,100 முறைப்படியான அங்கீகாரமின்றி விசேட படியாக செலுத்தப்பட்டிருந்தது.

### 10.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சிக்கனமற்ற விதத்தில் நிறுவனத்திற்குப் சாதகமற்றதாக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்களும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது. பின்வரும் சந்தர்ப்பங்களை உதாரணமாக காட்ட முடியும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளைத் தயாரித்தல் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டில் அதற்காக செயற்படுவதற்காக ரூபா 98,000 மாதாந்த படிக்கு ஆலோசகர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். அந்தப் பணிக்காக 2006 இலிருந்து 2010 ஜனவரி வரை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலகம் ரூபா 1,899,639 இனை செலவிட்டிருந்த போதிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவிற்கான ஒழுங்குவிதிகள் கையேடு அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாத ஒழுங்குவிதிகள் கையேடு தயாரிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு பெருந்தொகையினை செலவிட்டு தயாரிக்கப்பட்டிருந்த ஒழுங்குவிதிகள் கையேட்டினை மீளவும் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழு அங்கீகரிக்காதிருப்பின் அல்லது அதற்குப் பதிலாக வேறு மாற்றுவழியொன்றை ஈடுபடுத்துமாயின் இதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினம் என்பதனை சுட்டிக்காட்டுகிறேன்.

## 10.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 07 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 15 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 92 | 70 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 48 | 36 | 12 |
| | மொத்தம் | 180 | 128 | 52 |

### (ஆ) பயன்படுத்தாத/குறைவாகப் பயன்படுத்திய மனித வளங்கள்

2009 ஏப்ரல் 08 ஆந் திகதி முதல் 2011 மே 19 ஆந் திகதி வரையான 25 மாத காலத்தில் ஆணைக்குழு செயற்படாதிருந்த போதிலும், மேற்படி காலப்பகுதிக்காக பயனுள்ள சேவையினைப் பெற்றுக்கொள்ளாது சம்பளங்களும் படிகளும் அதற்கும் மேலதிகமாக சம்பளத்தில் 25 சதவீதமான விசேட படியும் செலுத்தப்பட்டிருந்தது.

## 11. ஒதுக்கீட்டுத் தலைப்பு 13 – நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு

நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூலை 20 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 11.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 11.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) இலிருந்து (ஊ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 11.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்குரிய 01301 ஆம் விடய இலக்கத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் மீதான இணக்கக்கூற்று 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

ஒரு முலதச் செலவு விடயத்திற்கும் 05 மீண்டெழும் செலவு விடயங்களுக்கும் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 37% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### (இ) எல்லைகளைப் பின்பற்றாமை

01301 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 1,800,000 என பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 358,801 இனால் அந்த எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. 2011 மே 31 ஆந் திகதியளவில் பாராளுமன்றத்தினைக் கொண்டு இந்த ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையினை திருத்திக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு திருத்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

01301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 713,848 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாக காணப்பட்ட மீதிகளை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**(உ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

ஆணைக்குழுவினால் 2010 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2010 திசெம்பர் 31 அளவில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிருந்து ஆணைக்குழுவினால் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 206,712 ஆகும்.

## 11.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 08 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 29 | 25 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 16 | 08 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - | 06 |
| | மொத்தம் | 93 | 62 | 37 | 06 |

## 12. ஒதுக்கீட்டுத் தலைப்பு 14 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூன் 22 ஆந் திகதி ஆணைக்குழுவின் பதிற்கடமை செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 12.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 12.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்பு மற்றும் 12.4 மற்றும் 12.7 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பாதீட்டு முரண்**

15 மீண்டெழும் மற்றும் மூலதன செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 30% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 12.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்படம்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 757(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத பொருட்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்கள் 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் 2010 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2011 யூன் 30 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படாமையால் 2009 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் செயலிழந்து காணப்பட்டது.

அதன் காரணமாக மீளாய்வாண்டில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்த 327 பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் படி 2010 ஆம் ஆண்டில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 30,852,096 மொத்தமான தொகை பயனற்ற செலவினமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 12.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிரந்தர செயலாளர் ஒருவர் நியமிக்கப்படாமை

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்காது 2010 மார்ச் 08 ஆந் திகதி முதல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பதிற்கடமை செயலாளரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

### (ஆ) அங்கீகரித்த ஊழியர் பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 02 | 26 |
| (ii) | இரண்டாம் நிலை | 53 | 35 | 18 |
| (iii) | மூன்றாம் நிலை | 16 | 13 | 03 |
| | மொத்தம் | 97 | 50 | 47 |

## 13. ஒதுக்கீட்டுத் தலைப்பு 15 – நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபை

நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 13.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 13.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபையின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 13.4 இலிருந்து 13.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபையினால் 2010 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 13.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள |
|---|---|
| (அ) 2002 இன் 04 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் (7) ஆம் பிரிவு | இணக்கப்பாட்டு அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப் படுகின்ற எவையேனும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு மாத கால எல்லையில் விசாரணை செய்து இறுதியாக பொருத்தமானதை செய்ய வேண்டிய போதிலும் அந்தக் கால எல்லையினை தாண்டியிருந்த 63 முறைப்பாடுகள் தொடர்பில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் பொருத்தமானது செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 231 | வேறு பதிவேடொன்றை பார்வையிடாமல் சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் முழுமையான விபரங்களை உள்ளடக்கிய கோவைகளின் இலக்கங்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் காட்டப்பட் டிருக்கவில்லை. |

## 13.5 திட்டமிடல் மற்றும் செயலாற்றல்

2002 இன் 04 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினாலும் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரை அல்லது தீர்மானத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடொன்றை இணக்கம் செய்வதற்காக 2003 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு இணக்கப்பாட்டு அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைத்திருந்த 46 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்து இறுதியாக பொருத்தமானதை செய்வதற்கு எடுக்கப்பட்டிருந்த காலம் மீதான பகுப்பாய்வொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| முறைப்பாட்டுடன் தொடர்புபட்ட நிறுவனம் | இறுதியாக பொருத்தமானதை செய்வதற்கு எடுக்கப்பட்டிருந்த காலம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | 1-12 மாதம் | 1-2 வருடம் | 1-2 வருடம் | 1-2 வருடம் | 1-2 வருடம் | 1-2 வருடம் | |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 4 | 7 | 6 | 3 | 4 | 1 | 25 |
| தேசிய பொலிஸ் ஆணைக்குழு | - | 13 | 6 | 1 | - | 1 | 21 |
| மொத்தம் | 4 | 20 | 12 | 4 | 4 | 2 | 46 |

## 13.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | இரண்டாம் நிலை | 12 | 11 | 01 |
| (iii) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 18 | 17 | 01 |
| | ==== | ===== | ===== |

## 14. ஒதுக்கீட்டுத் தலைப்பு 16 – இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்கள் புலனாய்வு ஆணைக்குழு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்கள் புலனாய்வு ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 14 ஆந் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்கள் புலனாய்வு ஆணைக்குழுவின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 14.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 14..3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்கள் புலனாய்வு ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 14.4 இலிருந்து 14.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்**

ஆணைக்குழு அலுவலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

02 மூலதன செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 75% இற்கும் 99% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 01601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 388,829 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளின் அறவிடல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) அசைவுறாத நிலுவைக் கடன் மீதிகளிற்குரிய ரூபா 302,807 நிலுவைக் கடன் மீதிகள் 3 வருடங்களுக்கு மேலாக நிலவி வருவதுடன் அந்நிலுவை மீதிகளின் அறவிடல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

**(ஈ) இலஞ்ச புலனாய்வுகளில் இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு**

**தீர்க்கப்படாத முற்பணங்கள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் படி 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 6,811,212 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அதன் மீதான காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| கால வீச்சு (ஆண்டுகள்) | 1 இற்கு குறைந்த | 1-6 | 6-10 | 10-15 | 15-20 | 20-25 | 25-30 | 30 இற்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வழக்குகளின் எண்ணிக்கை | 08 | 172 | 35 | 14 | 15 | 03 | 06 | 03 | 256 |
| பெறுமதி (ரூபா) | 233,000 | 6,036,965 | 377,770 | 91,600 | 68,500 | 900 | 2,225 | 252 | 6,811,212 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

வழக்குப் பொருட்களிற்கு பொறுப்பான உத்தியோகத்திரின் பொறுப்பிலிருந்த ரூபா 74,477 மொத்தத் தொகைக்குரிய 32 வழக்குகளிற்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த வழக்குகளிற்குரிய பணத்தினைத் தீர்ப்பதற்கோ அல்லது வேறு பொருத்தமானதைச் செய்ய முடிந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 14.4 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்ச்சி பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2008 மார்ச் 13 ஆந் திகதிய பீஎப்/472(1) ஆம் இலக்க பொது | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 22 வாகனங்களில் 11 வாகனங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் காப்புறுதி |

நிதிச் சுற்றறிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 14.5 செயலாற்றல்

ஆணைக்குழுவினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 14.6 முகாமைத்துவ பலவீனங்கள்

ஆணைக்குழு அலுவலகத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2010 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சேவை வழங்கும் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் படி மாதாந்த சேவைக் கட்டணமாக பெறுமதிசேர் வரி நீங்கலாக ரூபா 75,000 ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த சேவை நிறுவனத்திற்கு கட்டணத்தினைச் செலுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் உரிய ஊழியர்கள் சேவைக்கு வருகை தந்திருந்தனரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஊழியர்களிற்கான வருகைப் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை.

## 14.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 22 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 63 | 52 | 11 |
| (iii) | ஆரம்ப நிலை | 53 | 46 | 07 |
| | மொத்தம் | 146 | 120 | 26 |

## 14.8 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 15. ஒதுக்கீட்டுத் தலைப்பு 17 – தேர்தல்கள் திணைக்களம்

தேர்தல்கள் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 19 ஆந் திகதி தேர்தல்கள் ஆணையாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 15.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும்

15.4 முதல் 15.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

13 செலவு விடயங்களுக்கு கூடுதலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 22% இற்கும் 85% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 392,195 மொத்தமான வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 01701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 19,000,000 ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையினை 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் ரூபா 3,759,856 ஆல் அணுகியிருக்கவில்லை. இது தொடர்பில் 2011 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தினைக் கொண்டு எல்லையினை திருத்தியமைத்துக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,760,307 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(iii) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை 3 மாத காலத்தில் தீர்க்கவேண்டிய போதிலும் 2000 இலிருந்து 2010 வரையான காலப்பகுதியில் சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச்சென்ற 05

உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 797,639 கடன் மீதிகள் 2011 யூன் 30 வரை தீர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. .

(iv) 2003 ஜனவரி மாதம் பதவிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 38,879 கடன் மீதி 2011 யூன் 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) 1999 முதல் 2010 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் 6 உத்தியோகத்தர்களின் சேவை வறிதாக்கப்படடிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 434,721 கடன்மீதியினை அந்த உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது பிணைதாரர்களிடமிருந்தோ 2011 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 15.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் சகல சொத்துக்களும் பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்க வேண்டிய போதிலும் குருணாகல் தேர்தல்கள் அலுவலகத்தில் 1,355 வாக்குப் பெட்டிகள் பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 இன் சனாதிபதித் தேர்தலிற்கும் பொதுத்தேர்தலிற்கும் வெளி மாவட்டங்களிலுள்ள தேர்தல் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 169 வாக்குப் பெட்டிகளை மீள ஒப்படைக்காது 2010 ஆகஸ்ட் 30 ஆந் திகதியளவிலும் குருணாகல் தேர்தல்கள் அலுவலகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) பணப் பெறுமதி கொண்ட எரிபொருள் கட்டளை அனுமதிப்பத்திரப் புத்தகங்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் அடிக்கட்டைப் புத்தகங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 316 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் 10 எரிபொருள் கட்டளைப் புத்தகங்கள் அழிவடைந்திருந்தன.

(ஈ) இரத்தினபுரி தேர்தல் அலுவலகத்தின் போக்குவரத்துக் குழுவினால் மீளளிக்கப்பட்டிருந்த எரிபொருள் கட்டளைப் புத்தகங்களில் 06 கட்டளைகள் விநியோகிக்கப்படாது கட்டளையிடும் அதிகாரியின் கையொப்பமும் அலுவலக முத்திரையும் பொறிக்கப்பட்டிருந்ததுடன் மேலுமொரு புத்தகத்தில் 02 கட்டளைகள் காபன் பிரதியுடன் காணாமல் போயிருந்தன.

## 15.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | தேர்தல்கள் ஆணையாளரினால் 2010 ஏப்ரல் 16 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 762 | அதிகளவு இருப்பினை வைத்திருக்கக்கூடாத போதிலும் 2011 பெப்ரவரி 11 ஆந் திகதியளவில் களஞ்சியத்தில் 99 டயர் மீதியொன்று காணப்பட்டது. |
| (இ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்ச்சி பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஓடிய பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்புகள் வாகன லொக் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 திசெம்பர் 10 ஆந் திகதிய ரீஆர்/11/05 ஆந் திகதிய தேர்தல்கள் திணைக்களச் சுற்றறிக்கையின் (iv) ஆம் பந்தி | எரிபொருள் கட்டளைகளை விநியோகிக்கும் ஆவணங்களை வாக்கெடுப்பு முடிவடைந்து இரண்டு வாரங்களிற்குள் உதவித் தேர்தல் ஆணையாளரின் பொறுப்பிற்கு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தும் 2010 மார்ச் மற்றும் ஏப்ரல் தேர்தல்களிற்காக குழுவிற்கு ஒப்படைக்கப் பட்டிருந்த அந்த ஆவணங்கள் 2010 திசெம்பர் கணக்காய்வுத் திகதி வரை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**15.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை கொண்டனவாகும். தெரிவுப் பரிசோதனைகளில் அவ்வாறு வெளிப்பட்ட ஒருசில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சனாதிபதி மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களிற்கு தற்காலிகமாக மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கண்டி மற்றும் குருனாகல் ஆகிய 02 மாவட்ட அலுவலகங்களிற்காக ரூபா 10,133,717 மொத்தமான தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தச் செலவினத்தில் மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாத உபகரணங்களிற்காக ரூபா 2,750,204 இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருப்பினும் அந்த உபகரணங்கள் தேர்தல்கள் அலுவலகங்களிற்கு மீள ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் அவை இலங்கை மின்சார சபையினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

(ஆ) 03 மாவட்ட அலுவலங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட அலுவலகங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மின்சாரத்திற்காக விபரமாகத் தயாரிக்கப்படாத மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு அவற்றிலுள்ள பெறுமதிகள் செலுத்தப்பட்டிருந்தன. பயன்படுத்திய உள்ளபடியான மின்சார அலகுகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொள்தல் இதன்போது இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2010 இல் இடம்பெற்ற சனாதிபதி தேர்தல்களிற்கு மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 3,731,127 மொத்தமான மதிப்பீட்டுப் பெறுமதி கண்டி மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டுப் பெறுமதியில் 65 சதவீதம் அல்லது ரூபா 2,433,975 தொகையான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட பணிகள் சரிவர நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்படி நடவடிக்கைகளில் குருணாகல் மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் போட்டி முறையொன்றின் மூலம் 40 தொலைபேசிகள் தற்காலிக நேரடி தொலைபேசி இணைப்புக் கட்டணமெதுவுமின்றி தொலைபேசிக் கம்பனியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு அரசாங்கத்திற்கு பெருந்தொகையான நிதி சேமிக்கப்பட்டிருந்தது. அந்த முறை ஏனைய மாவட்ட தேர்தல் அலுவலகங்களினாலும் பின்பற்றப்பட்டு அரசாங்க செலவினை குறைக்கும் செயற்பாட்டிற்கு பங்களித்திருக்கவில்லை.

**15.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

திணைக்களத்தின் தேவைப்பாட்டினை சரியான முறையில் கணிப்பிடாது ஒரே தடவையில் அதிகளவில் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த டயர்களை நீண்டகாலமாக களஞ்சியத்தில் வைத்திருந்தமையால் அவற்றின் தரம் குறைவடைந்திருந்தமை இரத்திணபுரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 04 டயர்கள் பழுதடைந்து திரும்பி வந்திருந்தமையிலிருந்து உறுதியாகியது.

## 15.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 | 33 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 356 | 307 | 49 |
| (iv) | ஆரம்ப நிலை | 136 | 112 | 24 |
| | மொத்தம் | 529 | 453 | 76 |

## 15.9 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

2000 மார்ச் 15 ஆந் திகதிய பீஎப்/பீஈ/07 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை தாபித்து அதன் செயன்முன்னேற்றத்தினை பொதுத் திறைசேரிக்கு அறிவித்தல் வேண்டும். அதன்படி திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2007 யூலை 27 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 நவம்பர் 30 ஆந் திகதி வரை கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 16. ஒதுக்கீட்டுத் தலைப்பு 18 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2012 பெப்ரவரி 09 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 16.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 16.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 16.4 இலிருந்து 16.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------
திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இலக்கம்** | **கணக்கின் பெயர்** |
|---|---|
| 18 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 20.03.02.01 | வருமானக் கணக்கு |
| 01801 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று |

**(ஆ) பாதீட்டு முரண்**

04 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 52% இற்கும் 84% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) வருமானக் கணக்கு**

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி ரூபா 184,275,655 தொகையான வருமான நிலுவை காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 தொடக்கம் 02 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தானதாகும்.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

01801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,696,808 கூட்டுமொத்தமாக இருந்தது.

**16.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப தரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அதனையொத்த சேவைகளில் 42.59 சதவீத வெற்றிடம் காணப்பட்டது.

## 17. ஒதுக்கீட்டுத் தலைப்பு 19 – நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம்

---

நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 30 ஆந் திகதி நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலக ஆணையாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**17.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரை உள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 17.4 இலிருந்து 17.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்குகளைச் சமர்ப்பித்தலும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதலும்**

(i) நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 19 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 01901 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று |

(ii) அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் | நிதிப்பிரமாணம் 110 |

| | |
|---|---|
| பதிவேடு | |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(இ) பாதீட்டு முரண்**

------------------------

06 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 12% இற்கும் 49% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

------------------------

(i) 01901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடியான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 108,048 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் இடையே ரூபா 36,752 வேறுபாடொன்று காணப்பட்டது. அந்த வேறுபாட்டிற்குரிய காரணங்கள் இணக்கக் கூற்றினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கனணி வெளியீட்டுப் பிரதியின் படி ஆண்டின் தொடக்க மீதிகளிற்கிடையே ரூபா 4,921 வேறுபாடொன்று நிலவியதுடன் இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 17.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டின் பின்னர் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 17.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 17.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 18 | 07 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 08 | 02 | 06 |
| (v) | ஏனையோர் (அமைய/ஒப்பந்தம்) | 01 | 01 | - |
| | மொத்தம் | 30 | 12 | 18 |

## 18. ஒதுக்கீட்டுத் தலைப்பு 20 – நிதி ஆணைக்குழு

நிதி ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதி செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 18.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும்

இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 18.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) இல் உள்ள பொது அவதானிப்பு மற்றும் 18.4 முதல் 18.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) பாதீட்டு முரண்

07 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 23% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### 18.4 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப்பிரமாணம் 94 | 143,012 | 03 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 88,390 இனை மிகைத்து ரூபா 143,012 ஆன பொறுப்புக்கள் |

| | | |
|---|---|---|
| | | ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.13 ஆம் பந்தி | 412,042 | இரண்டு வாகனங்களிற்குரிய உள்ளக புதுப்பித்தல்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்களின் நியாயமான தன்மை குறித்து தகைமைகொண்ட பொறியியலாளர் ஒருவரிடமிருந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 18.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### கட்டிடமொன்றை வாடகைக்கு பெறுதல்

நிதி ஆணைக்குழு அலுவலகத்தினை இயக்கிச் செல்வதற்காக 2010 மே 15 முதல் 2013 யூலை 14 வரையான காலத்திற்கு ரூபா 5,280,000 இனை செலுத்தி கட்டிடமொன்று வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) கட்டிடத்தினை வாடகைக்குப் பெறுவதற்காக விலைமனுக்களை கோருகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.1(அ) இலுள்ள நிபந்தனைகளை பின்பற்றாமை காரணமாக விலைவிபரங்கள் குறிப்பிடப்பட்ட கடிதங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றவுடன் கொள்வனவுச் சபையல்லாத வேறு நபர்களிற்கு திறப்பதற்கான சாத்தியம் நிலவியது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.1 (ஆ) பிரகாரம் விலைமனுக்கள் அடங்கிய கடிதங்கள் பொறியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.1 (ஈ) பிரகாரம் விலைமனுக்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விலைமனுதாரர்களால் ஒரு பிரதி மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.3 (ஆ) பிரகாரம் விலைமனுதாரர்களினதோ அல்லது அவர்களது பிரதிநிதிகளினதோ முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் விலைமனுக்களை திறப்பதற்காக பிரதிநிதியொருவர் மாத்திரமே பங்குபற்றியிருந்தார். விலைமனுக் கோரலிற்கான செய்தித்தாள் அறிவித்தலில் விலைமனுக்களை திறக்கும் தினத்தில் சமூகமளிக்குமாறு விலைமனுதாரர்களிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.4 (அ) பிரகாரம் விலைமனுக்களை திறக்குகையில் ‘‘மூலப் பிரதி’’ மாத்திரமே திறக்கப்பட வேண்டும் என்பதுடன் ‘‘ஏனைய பிரதிகள்’’ திறக்கப்படக்கூடாத போதிலும் ஆணைக்குழுவினால் ஒரு பிரதி மாத்திரமே வரவழைக்கப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 6.3.6 இன் பிரகாரம் விலைமனுக்களை திறத்தல் தொடர்பான நடவடிக்கைகள் உரிய படிவங்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(எ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.11.1 இன் பிரகாரம் உரிய படிவத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விபரமான விலைமனு மதிப்பீட்டு அறிக்கையொன்றும் 2.11.3 இன் பிரகாரம் விலைமனு மதிப்பீட்டு பொழிப்பறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கொள்வனவுச் சபையினால் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களின் பொழிப்பு அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.11.3 ஆம் இலக்க படிவத்திற்கமைய அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கட்டிடத்திற்கான மாதாந்த/வருடாந்த வாடகையினை மதிப்பீடுசெய்தல் தொடர்பில் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஓ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த 08 விலைமனுக்களில் குறைந்த வாடகையினைக் குறிப்பிட்டிருந்த நிறுவனத்திடமிருந்து கட்டிடத்தினை வாடகைக்கு எடுத்திருந்த போதிலும் அலுவலகத்திற்கு ஏற்ற விதத்தில் கட்டிடத்தினை தயார்செய்வதற்காக மேலும் ரூபா 1,297,618 ஆணைக்குழுவினால் செலவிடப்பட்டிருந்தது.

## 18.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 06 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 03 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 45 | 37 | 08 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 10 | 08 | 02 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்தம்) | 02 | 02 | - |
| | | ----------- | -------- | ---------- |
| | மொத்தம் | 75 | 56 | 19 |
| | | ==== | ===== | ==== |

## 19. ஒதுக்கீட்டுத் தலைப்பு 21 – தேசிய கல்வி ஆணைக்குழு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஏப்ரல் 29 ஆந் திகதி தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**19.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 19.4 இலிருந்து 19.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 250,000 தேறிய ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

02101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,108,898 கூட்டுமொத்தமாக இருந்தது.

**19.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பரிந்துரைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2010 திசெம்பர் 31 அளவில் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 104,611 ஆனதுடன் அவை ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

## 19.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

2003 ஏப்ரல் 03 ஆந் திகதிய 393(4) மற்றும் 2010 செப்தம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் கடமை வதிவிடம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்கும் உரித்துடைய உத்தியோகத்தர்களிற்காக திரட்டிய தொலைபேசிக் கட்டண எல்லையினைக் கணிப்பிடாது அனைத்துச் சிட்டைகளும் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தன.

### (ஆ) வரித்தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகாமை

2007 யூன் முதல் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய வாடகைக்கான பெறுமதிசேர் வரியிலிருந்து பிடித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 704,600 ஆன பிடித்து வைத்தல் வரித்தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்காது வழங்குனரிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 19.6 செயலாற்றல்

2010 இன் வருடாந்த மதிப்பீடு / செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) போதியளவில் அடையப்படாத பிரதான நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் பிரதான நடவடிக்கைகள் போதியளவில் அடையப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) இரண்டாம் நிலைக் கல்விச் செயற்திட்டத்தினால் (SEMP) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,174,300 தொகையிலிருந்து 52 சதவீதம் அல்லது ரூபா 1,040,637 தொகையும் அறிவுடைய சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தினால் (EKSP) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா

4,810,200 தொகையிலிருந்து 96 சதவீதமான ரூபா 4,633,909 தொகையும் நிறுவனத்தினால் குறித்த செயற்பாடுகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 3,071,400 செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 கல்வி ஆய்வுப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு 05 மாதம் முதல் 10 மாதங்கள் வரையாக வீச்சில் காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) திட்மிடலும் செயலாற்றலும்**

----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்தந்த விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகைகள் குறிப்பிடப்படாதிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையினால் அடையப்பட்ட செயற்பாடுகளின் நிதிசார் முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

**19.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

----------------------------------------------------------

தேசிய ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான ஒருசில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்படல்**

----------------------------------------------------------------------------------------------------------------------------

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 442,400 ஆன டிஜிடல் டுப்லிகேடர் (Digital duplicator) இயந்திரத்தைக் கொள்வனவு செய்யாது ரூபால 937,440 இற்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமிக்காது ரூபா 451,434 பெறுமதியான 06 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 02 பொருட்களிற்காக மிகவும் குறைந்த விலையினைக் கருத்திற் கொள்ளாதிருந்தமை காரணமாக ரூபா 43,700 இனை மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

03 பொருள் அலகுகள் உரிய குறித்துரைப்புகள் மற்றும் ஏனைய இணங்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கியிருந்தன என சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 1,051,207 பெறுமதியான இரண்டு பொருள்களுக்காக விலைமனுக்களைத் திறப்பதற்கு 04 மற்றும் 06 தினங்கள் தாமதம் செயய்ப்பட்டிருந்தன.

(iv) 02 வாகனங்களிற்காக 05 சந்தர்ப்பங்களில் ரூபா 103,490 செலுத்தி செய்து கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களிற்கான விலைகள் நியாயமானவை என்றும் திருத்தங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும் தகைமைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் 03 சந்தர்ப்பங்களில் குறைவான விலைக்கு மேலான ரூபா 16,605 கூடிய விலைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

## 19.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 09 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 07 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 39 | 31 | 08 |

## 19.9 உள்ளகக் கட்டுப்பாடு

**(அ) உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்**

(i) மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு தடவை மாத்திரம் கூடியிருந்தது.

(ii) அந்த குழுவிற்கு அவதானிப்பாளராக அரசாங்க கணக்காய்வாளர் பங்குபெறச் செய்யப்படாதிருந்ததுடன் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லைக்கு உட்படுத்தப்பட வேண்டிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை ஆய்ந்தறிதல், மதிப்பிடுதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முகாமைத்துவ கடிதங்களை பின்பற்றுதல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளை ஆராய்ந்து செயற்படுத்துதல் போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

## 20. ஒதுக்கீட்டுத் தலைப்பு 22 – மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 செப்தம்பர் 07 ஆந் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 20.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக்

கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**20.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடபான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு இவ்வறிக்கையின் (அ) இலிருந்து (ஆ) வரை காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 20.4 இலிருந்து 20.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதல்**

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

12 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 21% இற்கும் 95% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**20.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நி.பி. 756 இன் படி ஆணைக்குழுவினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2011 யூன் 30 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2009 ஆம் ஆண்டிற்கே பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் கூட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் (United Nation Joint Programme on Human Rights) 10 பிரதேச அலுவலகங்களிற்காக ரூபா 4,643,920 பெறுமதிகொண்ட பொருட்கள்

வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை தலைமை அலுவலகத்தின் புத்தகங்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**20.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்

1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டம்

| | |
|---|---|
| (i) 15(6) ஆம் பிரிவு | ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளின் பிரதியொன்று பாதிக்கப்பட்ட நபரிற்கும் குறித்த நிறுவனத்தின் தலைவரிற்கும் தொடர்புடைய அமைச்சிற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் எந்தவொரு பரிந்துரையின் பிதியும் தொடர்புடைய அமைச்சரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 15(7) ஆம் பிரிவு | பரிந்துரை அனுப்பிவைக்கப்பட்ட எவரேனும் அதிகாரியினால் அல்லது நபரினால் அந்த பரிந்துரைகளை அமுலாக்குவதற்காக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு எதிர்பார்க்கின்ற செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளில் அது பற்றிக் குறிப்பிடாது “ பரிந்துரைகளை நடைமுறைப் |

படுத்தாதிருப்பதற்கு காரணங்கள் எதுவும் இருப்பின் அதனை அறியத்தரவும்'' என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் எந்தளவிற்கு நடைமறைப்படுத்தப்பட்டது அல்லது இல்லை என்பதனை தெளிவாக குறிப்பிட முடியாதுள்ளதுடன் அதற்கமைய முறைப்பாடுகள் புலனாய்வு செய்யப்படுவதன் பயனுறுதியினை மதிப்பீடு செய்ய முடியவில்லை. மேலும், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை பரிந்துரைகளில் தெளிவாகக் குறிப்பிடப்படாதிருந்தமை காரணமாக அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமையால் முறைப்பாட்டாளரினால் நிவாரணம்/நியாயத்தினை நிறைவேற்றுமாறு கோரி ஒரே முறைப்பாடு பல தடவைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

(iii) 15(8) ஆம் பிரிவு

பரிந்துரை அனுப்பிவைக்கப்பட்ட எவரேனும் அதிகாரியினால் அல்லது நபரினால் அந்த பரிந்துரைகளை அமுலாக்குவதற்காக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு எதிர்பார்க்கின்ற செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டியிருந்ததுடன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவதனை புறக்கணித்த சந்தர்ப்பங்கள் தொடர்பிலான முழுமையான அறிக்கையொன்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக ஆணைக்குழுவினால் சனாதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும் ஆணைக்குழு அவ்வாறு அதிகாரச்சட்டத்தின் படி செயற்பட்டிருக்கவில்லை. 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த முறைப்பாடுகள் தொடர்பில் பரிந்துரைகள் வழங்கப்பட்டு அவை நடைமுறைக்கிடப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழுள்ளவாறாகும்.

| ஆண்டு | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பரிந்துரைகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பரிந்துரைகள் நடைமுறைக்கிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பரிந்துரைகள் நடைமுறைக்கிடப் படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2008 | 3,692 | 202 | 56 | 146 |
| 2009 | 5,925 | 298 | 38 | 260 |
| 2010 | 4,4454 | 321 | 14 | உறுதியாக குறிப்பிடுவது சிக்கலானது என அறிவிக்கப்பட்டிரு |

ந்தது.

| | |
|---|---|
| (iv) 20(1) ஆம் பிரிவு | ஒவ்வொறு அழைப்பாணையும் ஆணைக்குழுவின் தலைவரது கையொப்பத்துடன் காணப்பட வேண்டிய போதிலும் 2000 ஆம் ஆண்டில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த அதிகார ஒப்படைத்தலிற்கமைய செயலாளர், மேலதிக செயலாளர் அல்லது தலைவரினால் அதிகாரமளிக்கப்படுகின்ற உத்தியோகத்தரினால் கையொப்பமிடுவதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு அழைப்பாணையிலும் கையொப்ப மிட்ட உத்தியோகத்தரின் பெயர், பதவி குறிப்பிடப்படாதிருந்ததுடன் கையொப்பம் மாத்திரம் இடப்பட்டிருந்தது. |
| (ஆ) தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாய த்தின் 3.2 ஆம் பிரிவு | வெளிநாட்டுப் பயணங்களிற்காக தற்காலிக அடிப்படையிலுள்ள உத்தியோகத்தர்களை பங்குகொள்ளச் செய்யக்கூடாத போதிலும் தகைமையுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோராது ஆணைக்குழு அதிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தது. |
| (இ) நிதிப்பிரமாணம் 177 | நிறுவகத்திற்கு கிடைக்கப்பெறும் பணங்களும் காசோலைகளும் அன்றைய தினம் அல்லது அடுத்தநாள் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 15 சந்தர்ப்பங்களில் ரூபா 209,460 ஆன பெறுவனவுகள் 06 தொடக்கம் 17 நாட்கள் வரையான காலதாமதத்துடன் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) 2000 மார்ச் 27 ஆந் திகதிய எம்எப்/6/1/3/2000 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | வெளிநாட்டுக் கடவுச் சீட்டினை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 2,500 இனை மாத்திரமே செலுத்த முடியுமாயினும் ஒரு நாள் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு உத்தியோகத்தர்களிற்கு ரூபா 7,500 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மேலதிமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 10,000 ஆகும். |

**20.6 செயலாற்றல்**

**------------------------**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்காமை**

---

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கின்ற அநேகமான இலக்குகளிற்காக அந்த இலக்குகளை அடைய எதிர்பார்த்துள்ள அளவு, போதியளவில் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக பௌதீக செயலாற்றவினை மதிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் ஆண்டில் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள ஏற்பாட்டின் அளவு தனியாக காட்டப்படாதிருந்ததுடன் இந்நிலமை காரணமாக ஆண்டின் இறுதியில் நிதிசார் செலாற்றலினை கணிப்பிட முடியாதிருந்தது.

## 20.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) ஆணைக்குழுவினை நியமித்தல்

---

04 ஆணையாளர்கள் மற்றும் தலைவர் ஒருவினை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் பணிகளிற்காக 2009 மே 17 ஆந் திகதியிலிருந்து ஆணையாளர்கள் நியமிக்கப்படாதிருந்ததுடன் தலைவரின் பதவிக்காலமும் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்தது. அதன் படி 2010 ஆம் ஆண்டில் ஆணைக்குழு செயலிழந்திருந்தது.

(ஆ) மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான தேசிய நிறுவகத்தின் சர்வதேச ஒருங்கிணைப்புச் சபையினால் பின்வரும் விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினை 2007 ஒக்தோபர் முதல் ‘‘ஏ’’ தரத்திலிருந்து ‘‘பீ’’ தரம் வரை கீழிறக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(i) ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவிகளிற்கு நியமனங்களை மேற்கொள்ளும் முறை தொடர்பில் திருப்திப்பட முடியாமை.

(ii) முறைப்பாடுகளை விசாரணை செய்தலின் செயன்முன்னேற்றம் போதியதாக இல்லாமை.

(iii) ஆண்டறிக்கைகளை நாளதுவரையாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்காமை.

மேலே (ii) இல் காட்டப்பட்ட விடயத்திற்காக 2006 இல் இடம்பெற்ற 2000 காணாமல் போனோர் தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டு அறிக்கையொன்றை ஜனீவா மனித உரிமைகள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டமையைக் காட்டும் கடிதம் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலே (iii) இல் காட்டப்பட்ட விடயத்திற்காக 2008 இற்கான அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்குரிய ஆண்டறிக்கைகள் 2011 செப்தம்பர் 05 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது மீறல்களிற்கு அண்மித்திருந்தமைகள் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை, அந்த முறைப்பாடுகளை தீர்த்துவைத்தல் தொடர்பிலான செயன்முன்னேற்றம் மற்றும் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்படாது எஞ்சியிருந்த முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி (பிரதேச அலுவலகங்கள் அடங்கலாக) | 4584 |
| ஆண்டில் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை (பிரதேச அலுவலகங்கள் அடங்கலாக) | 4445 |
| | ---------- |
| | 9029 |
| புலனாய்வு செய்யப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை | (679) |
| | ---------- |
| | 8350 |
| புலனாய்வு செய்யப்பட்டு பரிந்தரைகள் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4013 |
| | ------------- |
| புலனாய்வு செய்யப்பட வேண்டியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4337 |
| | ======= |

## 20.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 24 | 11 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 105 | 114 | - | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 53 | - | 01 |
| | மொத்தம் | 195 | 192 | 13 | 10 |

- 2010 யூன் 30 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கான அங்கிகரித்த ஊழியர் கோப்பு 195 ஆகும் என முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**20.9 உள்ளகக் கட்டுப்பாடு**

**நிதி அதிகாரங்களை கையளித்தல்**

(அ) ஆணைக்குழுவின் அலுவலகங்களினால் நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உள்ளகக் கணக்காய்வு**

2010 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று காணப்படவில்லை.

**21. ஒதுக்கீட்டுத் தலைப்பு 229 – சட்டமா அதிபதி திணைக்களம்**

அரசியலமைப்பு மன்றத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூன் 13 ஆந் திகதி சட்டமா அதிபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும்.

அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**21.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**21.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்டமா அதிபதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 21.4 இலிருந்து 21.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தலும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவருதலும்**

(i) சட்டமா அதிபதி திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திகதி |
|---|---|---|
| 229 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2011 ஏப்ரல் 18 |

| | | |
|---|---|---|
| 22901 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று | 2011 மே 03 |

(iii) திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கனணிகள் மற்றும் வன்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 24 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,620,805 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளின் அறவிடல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 381,968 ஆனதுடன் அவை ஒரு ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருவனவாகும்.

**21.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றிற்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 135 | நிதி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவு | 03 மாதங்களிற்கு மேல் 08 உத்தியோகத்தர் களிற்காக முழுமையான இணைந்த படியாக ரூபா 324,858 செலுத்தப்பட்டிருந்தது. |

## 21.5 செயலாற்றல்

2010 இன் வருடாந்த மதிப்பீட்டின் படி அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கு உரிமையான நிறுவனங்களிற்கும் ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் வழக்கு நடவடிக்கைகளின் போது அரசாங்கத்தினையும் அதன் நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் செய்வதே சட்டமா அதிபதித் திணைக்களத்தின் பிரதான பணிகளாகும். 2010 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்றம் மீதான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திறக்கப்பட்ட கொவைகளின் எண்ணிக்கை | பாரதூரக் குற்றச்சாட் டுக்களை அனுப்புதல் | ஆலோச னைகளை வழங்குதல் | விடுவித்தல்கள் | வேலை முடிவுறுத்தல் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| சிவில் பிரிவு | 2,383 | 1,888 | 271 | - | 280 |
| குற்றவியல் வழக்குப் பிரிவு | 6,535 | - | 1,505 | 984 | 4,377 |
| அரசாங்க சட்டத்தரணிகள் | 105 | - | - | - | 1,491 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரிவு | | | | | |
| உயர்நீதிமன்றப் பிரிவு | 700 | - | - | - | 182 |
| விசாரிக்கப்படாத வழக்குகள் | 556 | - | - | - | 05 |
| கூட்டுத்தாபன பிரிவு | 1,964 | - | - | - | 1,879 |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் | 3,424 | 729 | 295 | 347 | 1,371 |
| பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவு | 583 | - | 394 | - | 189 |
| மொத்தம் | 16,247 | 2,617 | 2,465 | 1,331 | 9,774 |

### 21.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாகும். தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட அவ்வாறான கொடுக்கல்வாங்கல் மீதான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

வெளி மாகாண நீதிமன்றங்களில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உயர்நீதியரசர்களின் அலுவலகச் சேவைகளிற்காக இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களிற்காக 2010 ஜனவரி 01 முதல் 2010 ஒக்தோபர் 31 வரை ரூபா 739,442 இணைந்த படிகள், பிரயாண மற்றும் இணைந்த படியில் 25 சதவீத படிகள் செலுத்தப்பட்டிருந்தன. இந்த உத்தியோகத்தர்கள் சட்டமா அதிபதி திணைக்களத்தின் நிரந்தர ஊழியர்களாவதுடன் அவர்கள் குறித்த நிதிமன்றங்களில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உயர்நீதியரசர்களின் அலுவலகச் சேவைகளிற்காக இணைப்புச் செய்யப்பட்டு பணிகளில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை காரணமாக மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 739,442 தொகை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மேலதிகச் செலவாகும். அவ்வாறே தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவிற்கு முரணாக மேற்படி தொகையில் ரூபா 414,160 செலுத்தப்பட்டிருந்தது.

## 21.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 196 | 172 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 164 | 125 | 39 |
| (iv) | ஆரம்ப நிலை | 176 | 166 | 10 |
| | மொத்தம் | 543 | 470 | 73 |

## 22. ஒதுக்கீட்டுத் தலைப்பு 230 – சட்ட வரைபுகளைத் தயாரித்தல் திணைக்களம்

சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூன் 30 ஆந் திகதி திணைக்களத் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய

வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**22.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**22.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்ட வரைபுகள் தயாரித்தல் திணைக்களத்தினால் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 22.4 இலிருந்து 22.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 230 இன் கீழ் 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,925,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) செலவின விடயமொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டில் 58 சதவீதமானது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 23001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 13,687,605 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளின் அறவிடல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) திணைக்களத்தினால் கடன்களை வழங்குகையில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 1,645,876 கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 22.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 170,283 ஆனதுடன் அவை ஒரு ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருவனவாகும்.

### (ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை

சட்ட வரைபுகள் வகுத்தல் திணைக்களம் நிறுவப்பட்டுள்ள அலுவலகக் கட்டிடமும் காணியும் திணைக்களத்திற்கு உரிமையானது என அல்லது வேறேதேனும் அடிப்படையில் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 22.5 செயலாற்றல்

2010 இன் வருடாந்த மதிப்பீட்டு/செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### திட்டமிடலும் செலாற்றலும்

2010 இன் வருடாந்த மதிப்பீட்டின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) சட்ட வரைபுகளிற்காக 75 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் 2008/2009 ஆம் ஆண்டில் நிவர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் அடங்கலாக 63 கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) சட்ட உதவிகளிற்காக 128 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் அரைவாசிக்கு மேல் நிவர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(இ) பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அதிகாரச்சட்ட வரைபுகளிற்காக 151 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று அவற்றில் 103 பூரணப்படுத்தப்பட்டிருந்தன. மாகாண சபைகளிற்காக வரையப்பட்ட 08 சட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) அரசாங்க அமைச்சுக்கள் 45 இன் கோரிக்கைகளிற்கமைய 63 அதிகாரச்சட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றில் 20 இற்கும் மேற்பட்டவைக்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## 22.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 | 15 | 21 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 06 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 57 | 32 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 17 | 15 |
| | மொத்தம் | 155 | 70 | 85 |